குழாய்கள் துருப்பிடித்ததன் காரணமாக துளைகள் ஏற்பட்டு அதன் காரணமாக அந்த நீர் நோய்க் கிருமிகளை மக்களிடத்திலே பரப்பக் கூடிய கழிவு நீரோடு கலந்துவிடுகின்ற பாதகமான நிலையைத் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எந்த அளவிற்கு ஒரு மாநகராட்சி மன்றம் நலத்துறையின் அலுவலர்களுடைய ஒத்துழைப்போடு இந்த காலராவைத் தடுப்பதற்கான முயற்சியிலே விரைவாக ஈடுபட வேண்டுமோ அந்த அளவிற்கு விரைவாகச் செயலாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்பப் பொதுவாகவே துப்புரவுப் பணிகள் நாடு முழுவதும் நடைபெறும் என்று சொல்லிவிட முடியாது. ஒரு பெரிய மாநகராட்சியில் மக்கள் தொகை மிக வேகமாக வளரக் கூடிய சூழ்நிலை இருக்கின்ற நிலையில் எடுக்கப்படக்கூடிய முயற்சி களில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் விரைவிலே அதை யெல்லாம் நீக்குவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) செயற்கைப் பட்டுநூல், ரேயான் ஆகியவற்றின் விலை உயர்வு காரணமாக, கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப் பட்டிருப்பதும், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதும் குறித்து.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: தலைவர் அவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் 'செயற்கைப் பட்டு நூல், ரேயான் நூல் ஆகியவற்றின் விலை சில மாதங்களாக உயர்ந்து விட்டதால், கைத்தறித் தொழிலில் மந்தநிலை ஏற்பட்டதன் காரணமாக கைத்தறி நெசவாளர்களுக்குக் குறிப்பாக, அருப்புக்கோட்டையில் உள்ள சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வேலையில்லாது பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் அவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்க வேண்டியதுபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.